செ.வெ.எண்: 1103 16/12/2010

**மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டும் பணி ஒருங்கிணைப்பு கூட்ட பத்திரிகை குறிப்பு வெளியீடு**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் திரு,வெள்ளக்கோயில் எம்.பி.சாமிநாதன் அவர்கள் தலைமையில் இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டும் பணி குறித்து நெடுஞ்சாலை மற்றும் இரயில்வே துறை உயர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் 16.12.2010 அன்று நடைபெற்றது.

1999 முதல் 2010 வரை 154 மேம்பாலம் / கீழ்பாலம் பணிகள் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவற்றில் இதுவரை 38 பணிகள் முடிக்கப்பட்டு 41 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. முடிக்கப்பட்ட 38 பணிகளில், 9 பணிகள் 1999 முதல் 2006 வரையில் ரூ.96.91 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 29 பணிகள் 2006–லிருந்து இதுவரை ரூ.303.85 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிதியாண்டிற்குள் 14 பணிகள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

34 புதிய பணிகள் ரூ.940.36 கோடி மதிப்பில் இரயில்வே துறைக்கு இரயில்வே திட்டப்பணிகள் 2011–12 கீழ் எடுத்துக்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைப்பு ஆய்வுக் கூட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் இரயில்வே துறைகளின் முக்கிய பிரச்சினைகள் பற்றியும், பணிகளின் நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும் திட்டமிட்டபடி மீதமுள்ள பணிகளை முடிக்க தேவையான நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும், 2011–12 ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ள புதிய பணிகள் பற்றியும் இரு துறைகளிடையேயான பணப்பகிர்வு (Cost Sharing) மற்றும் நீக்கப்பட வேண்டிய பணிகள் பற்றியும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9